நாள் 19.06.2025

சி.சி. 25/2021

புசா 1

பெயர் : மனோகரன்

த/பெ.பழனிச்சாமி

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்)

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of June 2025.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

1. எதிரி மற்றும் எதிரியின் மனைவி அவர்களை எத்தனை வருடங்களாக எனக்கு பழகக்கம் என்றால் கடந்த 2016 ம் ஆண்டு முதல் பழக்கம். 2016 முதல் 2018 ம் வருடம் வரை என்ன தொழில் செய்து வந்தேன் என்றால் எனக்கு சொந்தமாக தோட்டம் உள்ளது மேலும் ஒரு ஆம்னி வேன் வைத்து பேக்கரி அயிட்டங்களை விநியோகம் செய்யும் தொழில் செய்து வந்தேன். அந்த கால கட்டத்தில் என்னுடைய ஆண்டு வருமானம் என்ன என்றால் மாதம் சுமார் 15 முதல் 20 ஆயிரம் வரை வருமானம் இருக்கும். அப்படியென்றால் என்னுடைய ஆண்டு வருமானம் 1 ½ , 2 லட்சம் இருக்கும் என்றால் சரிதான். சாட்சி தானாக முன் வந்து தென்னந்தோப்பிலும் வருமானம் வரும் என்று கூறினார்.

2. குழந்தைகள் பராமரிப்பு மற்றும் வீட்டு செலவுகள் உள்ளது என்றால் சரிதான். எதிரி என்ன வேலை செய்கிறார் என்றால் அவருடைய வீட்டில் தங்க அடமானம் வாங்கி பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார். எதிரி நகை அடகு கடை வைத்து தொழில செய்து வரும் நிலையில் அவருக்கு போதுமான வசதி உள்ளது என்றும் வருடம் 2 லட்சம் வருமானம் பெறும் என்னிடம் அவர்எந்த கடனும் வாங்க தேவையில்லை என்றும் அவ்வாறு எதிரி என்னிடம கடன் வாங்கினார் என்று கூறுவது நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல. சாட்சி தானாக முன் வந்து தன்னுடைய மகளின் நகைகளை பெடரல் பாங்கில் அடமானம் வைத்து எதிரிக்கு கடன் கொடுத்ததாக தெரிவித்தார். நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றும் அவ்வாறு உண்மையிலேயே என்னுடைய மகளின் நகைகளை அடமானம் வைத்து கடன் கொடுத்திருந்தால் மேற்படி சங்கதியை வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மற்றும் சத்திய பிரமான வாக்குமூலத்தில் குறிப்பிட்டு இருப்பேன் என்றால் சரியல்ல.

3. எதிரிக்கு என்ன அடிப்படையில் அதாவது பணத்தை வட்டி அல்லது கைமாற்றாக கொடுக்கப்பட்டதா என்றால் வட்டிக்காக கொடுக்கப்படவில்லை. சாட்சி தானாக முன் வந்து

எதிரி 1% வட்டி அடிப்படையில் கடன் கொடுத்ததாக கூறினார். பெடரல் வங்கியில் எத்தனை பைசா வட்டிக்கு நான் அடமானம் வைத்தேன் என்றால் சிட்டா மற்றும் அடங்கல் ஆகியவற்றை காட்டி விவசாய கடன் பெற்றால் 33 பைசா வட்டியின் அடிப்படையில் கடன் பெற்றேன்.

4. கடந்த 2018 முதல் 2020 ஆகஸ்ட் வரை தோராயமாக எதிரி எவ்வளவு தொகை வட்டி கொடுத்தார் என்றால் எவ்வளவு வட்டி கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. முதலில் கொடுத்த ரூபாய் 5 லட்சத்திற்கு 2019 வரை வட்டி கொடுத்தார். உண்மையிலேயே நான் எதிரிக்கு பணம் கடனாக கொடுத்து அவர் எனக்கு நான் கூறும்படி வட்டி கொடுத்து வந்திருந்தால் அந்த தொகை பற்றி வழக்கறிஞர் அறிவிப்பு, புகார், சத்திய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடடு இருப்பேன் என்றும் அவ்வாறு குறிப்பிடாததால் நான் கூறுவது நம்பும் படியாக இல்லை என்றால் சரியல்லல.

5. கடந்த 2018 ம் வருடம் நான் ரூபாய் 5 லட்சம் கொடுத்தேன் என்றும் அந்த பணத்தை எதிரி திரும்ப தரவில்லை என்று கூறும்பொழுது மீண்டும் எதிரிக்கு 2019 ம் வருடம் ரூபாய் 5 லட்சம் கடன் கொடுத்தேன் என்று கூறுவது நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல. அவருடன் நெருங்கிய நண்பராக பழகியதால் மற்றும் கேரளாவில் தொழில் செய்வதற்கு பணம் தேவை என்று கூறியதின் அடிப்படையிலும் 2 மாதத்தில் கொடுத்துவிடுவேன் என்று உறுதி மொழி அளித்ததின்பேரிலும் அவருக்கு 2 வது முறை நான் பணம் கொடுத்தேன்.

6. என்னுடைய வழக்கு ஆவணங்களில் எதிரியின் மைத்துனரின் மகன் வெளிநாடு செல்வதற்காக ரூபாய் 5 லட்சம் கொடுத்தேன் என்று குறிப்பிட்டுள்ளேன். தற்போது கூறும் சாட்சியம் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. அவர் 2018 ம் வருடம் ரூபாய் 5 லட்சத்தை மைத்துனர் மகன் வெளிநாடு செல்வதற்காக பெற்றுச் சென்றதாகதான் குறிப்பிட்டுள்ளேன்.

7. கடந்த 2018 ம் வருடம் எதிரி நிலம் கிரையம் செய்வதற்காக ரூபாய் 5 லட்சம் என்னிடம் கடன் வாங்கி திரும்ப கொடுக்கவில்லை என்று கோயமுத்தூர் மாவட்ட குற்றப்பிரிவில் நான் புகார் கொடுத்தேன் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 23.03.2019 அன்று ரூபாய் 2 லட்சம், 26.03.2019 அன்று ரூபாய் 1,000/- மற்றும் 02.04.2019 அன்று ரூபாய் ஒரு லட்சம் மற்றும் குறிப்பிடாத தேதியில் ரூபாய் 49 ஆயிரம் மற்றும் 05.04.2019 அன்று ரூபாய் 1,50,000/- எதிரியினுடைய வங்கி கணக்கிற்கு நான் செலுத்தினேன் என்று குறிப்பிட்டுள்ளேன். கடன் வாங்கும் நபர் பகுதி பகுதியாக என்னிடம்

வாங்கியிருக்கமாட்டார் என்றும் அவருக்கு அவ்வாறு வாங்க வேண்டிய அவசியமும் இல்லை என்றும், நான் நீதிமன்றத்தில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. எதிரி 2 வதாக ரூபாய் 5 லட்சம் வாங்கினார் என்று குறிப்பிட்டுள்ளேன். அதற்கு எவ்வளவு வட்டி போடப்பட்டது என்றால் அதே 1% வட்டியில் பணத்தை திரும்ப கொடுப்பதாக எதிரி கூறினார். மேற்படி சங்கதி என்னுடைய வழக்காவணங்களான வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மற்றும் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடாததால் உண்மை தன்மை இல்லாத சங்கதி என்றால் சரியல்ல.

9. என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தில் கடந்த 20.08.2020 அன்று எதிரி என்னுடைய வீட்டிற்கு வந்து தன்னால் பணத்தை கொடுக்க இயலவில்லை என்று கூறி வழக்கு காசோலையை என்னிடம் கொடுத்தார் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேலும் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் அன்றைய தேதியில் எதிரி வழக்கு காசோலையை கையில் கொடுத்து 2 வாரங்கள் கழித்து வங்கியில் செலுத்துமாறு கூறினார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேலும் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 20.08.2020 அன்றே மேற்படி வழக்கு காசோலையை வங்கியில் தாக்கல் செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் நான் இருந்தேன் என்றும் ஆனால் அதன்பின்னிட்டு எதிரி அவருடைய மனைவியை வைத்து என் மனைவி மீது பொள்ளாச்சி மேற்கு காவல் நிலையத்தில் பொய்யான புகார் ஒன்றை அளித்தார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

10. எதிரியின் மனைவி என் மனைவி மீது எந்த தேதியில் புகார் கொடுததார், அந்த புகார் மீது காவல் நிலயைத்தில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் எந்த தேதியில் புகார் கொடுக்கப்பட்டது என்று எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய மனைவி சட்டத்திற்கு புறம்மாக அதிக வட்டி கோரியுள்ளார் என்றும் சட்டப்படி உள்ள பணத்தை மட்டுமே பெற்றுக் கொள்ளுங்கள் என்றும் எதிரியின் வீட்டிற்கு சென்று பிரச்சனை செய்யக்கூடாது என்றும் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளர் எங்களிடம் கூறினார். மேற்படி எதிரிக்கு பணம் கடனாக கொடுத்ததாக 10 நபர்கள் அங்கு இருந்தார்கள் அவர்களுக்கும் அதே சங்கதியை போலீசார் அறிவுறுத்தினார்கள். உண்மையிலேயே எதிரி 10 நபர்களை ஏமாற்றியிருந்தால் போலீசார் எதிரி மீது நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றும் அவ்வாறு எதிரி மீது நடவடிக்கை எடுக்காததால் நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. சாட்சி தானாக முன்

வந்து அவ்வாறு எதிரியால் ரூபாய் 40 லட்சம் ஏமார்ந்த நபர் ஒருவர் இந்நீதிமன்றத்தில் எதிரி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

11. இந்த வழக்கின் வழக்கு காசோலையில் உள்ள கையெழுத்து மற்றும் வேறு ஒரு நபர் தாக்கல் செய்ததாக கூறப்பட்டுள்ள வழக்கில் உள்ள கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்து ஆகியவை நானும் என்னுடைய ஆதரவாளர்களும் திட்டமிட்டு எதிரி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்பதற்காக அதனை தயார் செய்து தாக்கல் செய்துள்ளோம் என்று எதிரியின் வழக்கறிஞரிடம் இருந்து எனக்கு பதில் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

12. இந்த வழக்கின் காசோலை மற்றும் வேறு ஒரு நபர் தாக்கல் செய்துள்ளதாக கூறப்படுகின்ற வழக்கின் கடனுறுதி சீட்டு ஆகியவற்றில் உள்ள கையொப்பம் எதிரியுடையது அல்ல என்றும் மேற்படி ஆவணங்களை அங்கீகரிக்கப்பட்ட எதிரியின் கையொப்பத்தோடு ஆய்வுக்கு உட்படுத்துவதற்கு எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால், அந்த ஆவணங்களில் உள்ளது எதிரியின் கையொப்பம்தான். மேற்படி ஆவணங்களை ஆய்வுக்கு உட்படுத்துவதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

13. 20.08.2020 அன்று எதிரி எனக்கு வழக்கு காசோலை கொடுத்துவிட்டு அதன்பிறகு அவருடைய மனைவியை வைத்து என் மனைவி மீது பொய் புகார் கொடுத்தார் என்று கூறியுள்ளேன். அவ்வாறு இருக்கையில் 2 மாத காலம் காலதாமதமாக வழக்கு காசோலையை எதிரியிடம் இருந்து பணம் பறிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு வங்கியில் நான் செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு எந்த பணமும் கொடுக்கவில்லை என்றும் எதிரி எனக்கு எந்த கடன் தொகையும் திரும்ப செலுத்துவதற்கு கடமைப்பட்டவர் அல்ல என்றும் எதிரி என்னிடம் எந்த காசோலையும் கையொப்பமிட்டு கொடுக்கவில்லை என்றும் வழக்கில் காணப்பட்டுள்ள காசோலையில் உள்ள கையொப்பம் அவருடையது அல்ல என்றும் அந்த வழக்கு காசோலை என் வசம் எவ்வாறு வந்தது என்பது பற்றி விளக்கமாக பதில் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதனால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

14. கடந்த 2018 முதல் 2020 வரை கொரோனா தொற்று காலகட்டம் என்பதால் யாரும் வெளிநாடு சென்றிருக்க முடியாது அதனால் எதிரி அவரது மைத்துனரின் மகன் வெளிநாடு செல்வதற்காக ரூபாய் 5 லட்சம் பணம் கடன் வாங்கினார் என்று கூறுவது நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல. எதிரி நகைக்கடை வைத்து வசதியாக வாழ்பவர் என்றும்

வருடம் 2 லட்சம் வருமானம் வரும் என்னால் குடும்ப செலவு போக சேர்த்து வைத்து எதிரிக்கு நான் ரூபாய் 10 லட்சம் கடன் கொடுத்தேன் என்று கூறுவது நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/J.Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.